# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம்

## மனித உரிமைகளிலும் சமாதானக் கற்கைகளிலுமான தொலைக் கற்கை நெறி –2007/089

**சமாதானக் கற்கைகள் (பத்திரம் I1)**
(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. "சமாதானம் என்பது யுத்தமோ அல்லது மோதலோ இல்லாத சூழ்நிலையொன்றாகும்".

   மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உதாரணங்கள் காட்டி உமது விடைக்கான காரணங்களைத் தருக.

2. "மோதல்" என்ற எண்ணக்கருவினை வரையறை செய்வதுடன் அதற்கும் "வேறுபாடுகள்" (diversities) என்பவற்றுக்கும் இடையிலான உறவினையும் விபரிக்க.

3. மோதல்களுக்கான ஐந்து காரணங்களை அடையாளங் காண்பதுடன் அவற்றில் இரண்டினை ஆராய்க.

4. இலங்கையில் மோதலின் இனத்துவப் பரிமாணங்களைக் கண்டறிவதுடன் அதற்கான அமைதிவழித் தீர்வுகாண்பதில் உமது கருத்தில் மிகச் சிறப்பானதாக அமைந்திருக்கக் கூடியதாக இடம்பெற்றதான ஒரு முயற்சியினையாவது ஆராய்க.

5. உலகமயமாதலின் பின்னரான உலகில் மோதல்களுக்குத் தீர்வு காண்பதில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் வகிபங்கினை நுணுக்கமாக ஆராய்க.

6. வெற்றிகரமான எத்தகைய மோதல் தீர்வு தந்திரோபாயங்களிலும் மூன்றாந் திறத்தவரின் மத்தியஸ்தம் அவசியமானதென நீர் கருதுகின்றீரா? காரணங்கள் தருக.

*******

விதத்தில் அறிக்கையொன்றினை நீர் தயாரிக்க வேண்டுமென்று அவர் விரும்புகின்றார்.

சர்வதேசச் சட்ட ஆவணங்களிலிருந்து அதிகார ஆதாரங்களைக்காட்டி அந்த அறிக்கையினைத் தயாரிக்குக.

5. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமென கிடைப்பதாக உள்ள சர்வதேச பொறிமுறைக் கட்டமைப்பின் மீதும் மேற்குறிப்பிட்ட நோக்கத்துக்கெனப் பயனுறு கருவியாக அது செயற்படும் விதத்தின் போதுமான அல்லது மறுவாறான தன்மை மீதும் கருத்துரைக்க.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினைப்** பற்றிக் குறிப்பெழுதுக:

(அ) குழு உரிமைகள்,

(ஆ) சமூக நல அரசென்ற கருத்தமைவு,

(இ) மக்னா காட்டா (Magna Carta),

(ஈ) கலாசார உறவுவாதம் (cultural relativism).

*******

**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம்**

**மனித உரிமைகளிலும் சமாதானக் கற்கைகளிலுமான தொலைதூரக் கற்கை நெறி –2007/08**

**மனித உரிமைகள் (பத்திரம் I)**
(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. "மனித உரிமைகள்" என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது என்பதை விளக்குக.

   மேற்படி வினாவுக்கான உமது விடைக்கு ஆதரவாக நீர் ஆதாரங்காட்ட விரும்பும் அரசியல் - சட்டக் கோட்பாட்டினை ஆராய்க.

2. ஏனைய எல்லா வடிவங்களிலுமான அரசாங்கத்தைவிட ஜனநாயகமே மிகச் சிறந்தது என நீர் கருதுகின்றீரா? ஜனநாயகத்தின் அத்தியாவசியச் சிறப்பியல்புகளை அழுத்தியுரைத்து உமது விடையினை விபரிக்க.

3. "உரிமைகள் பட்டயம்" என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? அவற்றின் பிரதான மூலகங்களை, பல நாடுகளின் அரசியல் வரலாற்றை மாற்றியமைத்ததான அத்தகைய ஆகக் குறைந்தது **மூன்று** ஆவணங்களையாவது ஆதாரங்காட்டி விவரிக்க.

4. கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்னதாக தனது குடியேற்றவாத ஆட்சியாளரிடமிருந்து சுதந்திரம் பெற்றதான இலங்கானா என்ற வளர்முக நாடானது மோசமான உள்நாட்டு யுத்தம் ஒன்றை எதிர்கொண்டுள்ளது. உள்நாட்டு யுத்தத்தின்போது தனது பிரசைகளை சர்வதேச சமூகத்துக்கு ஏற்புடைத்தான விதத்தில் அது நடாத்தத் தவறியுள்ளதென சர்வதேச நிறுவனமொன்றினால் அது குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதன் வெளியுறவு அமைச்சரின் சட்ட ஆலோசகராக நீர் நியமிக்கப்படுவதாகக் கருதிக் கொள்ளவும். பிரசைகளை நடாத்தும் விடயம் என்பது இறைமைமிக்க ஒரு நாட்டின் ஓர் உள்விவகாரமாகும் என்பதுடன் அது பற்றி முறையிடுவதற்கு சர்வதேச சமூகத்துக்கு எதுவுமே இல்லை என்பதை வலியுறுத்தும்